தமிழ் மொழி

இறுதியாண்டுத் தேர்வு வகுப்பு 03 2-12-2006

பன்முகதேர்வு வினாக்கள் **Section A** வருடம்: 03

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | நாங்கள் ----------- நடிக்கிறோம்.<br>1. பாட்டு 2. நடனம் 3. நாடகம் 4. இசை | 1 | 2 | 3 | 4 |
| 2. | அவர் கோயிலுக்குப் போனார். இதில் வினைச்சொல்-----------.<br>1. போனேன் 2. போகிறார்கள். 3.போகிறோம். 4. போனார். | 1 | 2 | 3 | 4 |
| 3. | தாயார் மகனுக்குக் கடிதம் ------------------.<br>1. கற்பித்தார். 2. சிரித்தார் 3. அழுதார். 4. எழுதினார். | 1 | 2 | 3 | 4 |
| 4. | பூ பூத்தது. பூக்கள் ------<br>1.பூத்தன 2. பூத்தது 3. பூத்தனர் 4. பூத்தார்கள் | 1 | 2 | 3 | 4 |
| 5. | ----------- சொல் மிக்க மந்திரம் இல்லை.<br>1. தந்தை 2. தம்பியை 3. மாதாவை 4. மாமா | 1 | 2 | 3 | 4 |
| 6. | உறவு எதிர்ச்சொல் --------------.<br>1. விருப்பு 2. பிரிவு 3. ஆசை 4. தனிமை | 1 | 2 | 3 | 4 |
| 7. | அரசனின் எதிர்ப்பால் சொல் ---------------.<br>1. தங்கை 2. அம்மா 3. அரசி 4. நடிகை | 1 | 2 | 3 | 4 |
| 8. | அவன் பாட்டுப் பாடுகிறான். நான் பாட்டுப்<br>1. பாடினேன். 2. பாடுகிறோம். 3. பாடுவேன் 4. பாடுகிறேன். | 1 | 2 | 3 | 4 |
| 9. | பொன்-சிலை சேர்த்து எழுதினால்<br>1. பொற்றிலை 2. பொசிலை 3. பொன்சிலை 4. பொற்சிலை | 1 | 2 | 3 | 4 |
| 10. | நாய் என்னை பின்னால் துரத்தியது இதில் எழுவாய்<br>1. என்னை 2. துரத்தியது 3. பின்னால் 4. நாய் | 1 | 2 | 3 | 4 |
| 11. | ஆறுவது சினம் என்று கூறியவர் ------.<br>1. வள்ளுவர் 2. பாரதியார் 3. ஔவையார் 4. ஆதித்தனார் | 1 | 2 | 3 | 4 |
| 12. | எண்ணும் ---------- கண் எனத் தகும்.<br>1. இலக்கம் 2. கல்வி 3. எழுத்தும் 4. அழகு | 1 | 2 | 3 | 4 |
| 13. | சீதா வீட்டின் இலக்கம் ----- .<br>1. என் 2. எண் 3. திகதி 4. நான்கு | 1 | 2 | 3 | 4 |
| 14. | முதுமை என்பதன் எதிர்ச்சொல்<br>1. மறைவு 2. இளமை 3. இறப்பு 4.தோன்று | 1 | 2 | 3 | 4 |
| 15. | இருநூறு என்பது.<br>1.hundred 2. fifty 3. eighty 4. twohundred | 1 | 2 | 3 | 4 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 16. | ------------ கதைப் புத்தகம் படிக்கிறேன்.<br>1. நாங்கள் 2. நான் 3. நாம் 4. அவர்கள் | 1 | 2 | 3 | 4 |
| 17. | அந்தப் பெரிய மரம் கீழே ------------.<br>1. விழுந்தன 2. விழுந்தது 3. ஓடியது. 4. சென்றன. | 1 | 2 | 3 | 4 |
| 18. | ஆங்கில மொழியில் உள்ள எழுத்துக்கள் ----------<br>1. முப்பது 2. பன்னிரண்டு 3. இருபத்தியாறு 4. பதினாறு | 1 | 2 | 3 | 4 |
| 19. | தாத்தாவின் எதிர்ப்பால் சொல்<br>1. தலைவி 2. சிறுமி 3. மாணவி 4. பாட்டி | 1 | 2 | 3 | 4 |
| 20. | அவர்கள் மகிழ்ச்சியாக இருந்தார்கள். மகிழ்ச்சி என்பது<br>1. துக்கம் 2. சந்தோசம் 3. அழுகை 4. பெருமை | 1 | 2 | 3 | 4 |
| 21. | பங்குனி மாதத்தின் பின் வரும் மாதம் ------------ ஆகும்.<br>1. தை 2. சித்திரை 3. ஆவணி 4. மார்கழி | 1 | 2 | 3 | 4 |
| 22. | நாம் ஒவ்வொருநாளும் தெய்வம் -------------- வேண்டும்.<br>1. படிக்க 2. தொழ, 3. நட 4. ஓட | 1 | 2 | 3 | 4 |
| 23. | மிருகங்கள் மரத்தின் கீழ் வந்து --------<br>1. தங்கினார். 2. தங்கினாள். 3.தங்கின 4. தங்கினான். | 1 | 2 | 3 | 4 |
| 24. | நற்கலை பிரித்து எழுதினால்<br>1. நன் + கலை 2. நல்ல + கலை 3. நற் + கலை 4. ந + கலை | 1 | 2 | 3 | 4 |
| 25. | அவன் அந்தப் --------------- பெற்றான்<br>1. பரிசை 2. பரிசுக்கு 3. பரிசில் 4. பரிசால் | 1 | 2 | 3 | 4 |
| 26. | மெய்,வாய்,கண்,மூக்கு,செவி என்பது ---------<br>1. ஐம்புலன் 2. நான்குபுலன் 3. ஒன்பது புலன் 4. ஏழுபுலன் | 1 | 2 | 3 | 4 |
| 27. | பின்வருவனவற்றுள் பொருத்தமில்லாத சொல்<br>1.சாமி 2. இறைவன் 3. மாடு 4. தெய்வம் | 1 | 2 | 3 | 4 |
| 28. | பொய் என்பதன் எதிர்ச்சொல் ---------------.<br>1. உண்மை 2. செயற்கை 3. மகிழ்ச்சி 4. துன்பம் | 1 | 2 | 3 | 4 |
| 29. | சித்திரா மைதானத்திற்கு ------------------ போனாள்.<br>1. படிக்கப் 2. பறிக்கப் 3. விளையாடப் 4. பாடப் | 1 | 2 | 3 | 4 |
| 30. | அவன் தண்ணீரை ---------- என்று குடித்தான்.<br>1. மளமள 2. படபட 3. கடகட 4. கலகல | 1 | 2 | 3 | 4 |

( 30 புள்ளிகள்)

வினாக்கள் **Section B** வருடம்: 03

1.பின்வரும் பந்தியை வாசித்து கேள்விகளுக்குப் பதில் எழுதுக.

பரிஸ் நகரம் மிக அழகானது. அது பிரான்ஸ் நாட்டில் உள்ளது. அதன் நகர அமைப்பே அழகானது. பரிஸ் நகரத்தின் மத்தியில் நெப்போலியன் கட்டிய வெற்றி வளைவு உள்ளது. அதில் பன்னிரண்டு வீதிகள் சந்திக்கின்றன. அங்கு உலகப் பெயர்பெற்ற ஈபில் கோபுரம் உள்ளது. அதன் உச்சியில் நின்று பார்த்தால் பரிஸ் நகரம் மிக அழகாகத் தோன்றும். இந்நகரில் லூவர் என்னும் புகழ்பெற்ற ஓவியச்சாலை உள்ளது. மிகச் சிறந்த ஓவியங்கள் இங்கு உள்ளன. சென் எனும் நதி பரிஸ் நகரின் ஊடாக ஓடுகின்றது. சென்நதிக்கரையில் தேவாலயம் ஒன்று உண்டு. அதன் பெயர் நொற்றடாம் ஆகும். பரிஸ் நகரில் பல தமிழ் மக்கள் வாழுகின்றார்கள்.

நெப்போலியன் கட்டிய வெற்றி வளைவு எங்கு உள்ளது?

______________________________

ஈபில் கோபுரம் எங்கு உள்ளது?

______________________________

புகழ் பெற்ற ஓவியச்சாலையின் பெயர் என்ன?

______________________________

பிரான்ஸ் நகரினூடாக ஓடும் நதியின் பெயர் என்ன?

______________________________

அந்நதிக்கரையில் உள்ள தேவாலயத்தின் பெயர் என்ன?

______________________________

(10 புள்ளிகள்)

2. சரியான சொற்களைத் தெரிவு செய்து கீறிட்ட இடங்களை நிரப்புக.

(புரத, உணவு, சத்துள்ள, நிறையுணவு, தண்ணீர் )

நாம் சத்துள்ள ______________ உண்ண வேண்டும்.

பால் ஒரு ______________ ஆகும்.

சுத்தமான ______________ எப்போதும் அருந்த வேண்டும்.

முட்டை ____________ உணவுவகையில் முக்கியமானது.

மீன் வகைகள் மிகவும் ______________ சத்துள்ள உணவு ஆகும்.

(10 புள்ளிகள்)

3. நீச்சல் பயிற்சி செய்வதால் கிடைக்கும் நன்மைகள் பற்றி 5 வசனங்கள் எழுதுக.

(10 புள்ளிகள்)

4. பின்வரும் எடுத்துக்காட்டை பார்த்து வாக்கியங்களை மாற்றி அவற்றைக் கருத்துக்கமைய எழுதுக.

உ.ம்: நான் சிரித்தேன். நாங்கள் சிரித்தோம்.

நாங்கள் பாடம் படிக்கிறோம். நீங்கள்

நீ பாடசாலைக்கு போனாயா?. அவர்கள்

அவள் கடைக்கு சென்றாள். அவர்கள்

அவன் புத்தகம் படித்தான். நீ

நான் உடற்பயிற்சி செய்தேன். நாங்கள

(10 புள்ளிகள்)

5. பெரியவர் ஒருவர் வந்து தம்பி நீர் யார்? யாருடைய பிள்ளை? எங்கு இருக்கிறீர்? உமது பாடசாலை பெயர், என்ன வகுப்பு படிக்கிறீர் போன்றவற்றை கேட்கிறார். அதற்கு நீர் சொல்லும் பதில்கள் என்ன

(10 புள்ளிகள்)

6. கீறிட்ட இடங்களில் சரியான காலங்களில் வினைச்சொற்களை எழுதுக

வந்தேன் - வருகிறேன் - ____________

சென்றான் - ___________ - செல்வான்

பார்த்தார்கள் - பார்க்கிறார்கள் - _____________

படித்தாள் - படிக்கிறாள் - ________________

சிரித்தார் - ___________ - சிரிப்பார்

(10 புள்ளிகள்)

7. பின்வரும் சொற்களை சரியாக ஒழுங்கு செய்து வாக்கியமாக எழுதுக.

என் - நண்பனுக்கு - பிறந்தநாள் - நாளை

_______________________________________________________________

.போனார்கள் - பள்ளிக்கு - அவர்கள்

_______________________________________________________________

விமானம் - சென்றது - மேலே - பறந்து

_______________________________________________________________

வாழ்கின்றார் - இங்கிலாந்தில் - பெரியப்பா - என்

_______________________________________________________________

உதிக்கும் - காலையில் - சூரியன்

_______________________________________________________________

செய்வோம் - பஜனை - நாங்கள் - கோயிலில்

_______________________________________________________________

தாய் - மொழி - எங்கள் - தமிழ்.

_______________________________________________________________

சென்றார்கள் - அவர்கள் - சுற்றுலா - இங்கிலாந்துக்கு

_______________________________________________________________

பிடித்து - விளையாடினான் - இராமன் - ஓடிப்

_______________________________________________________________

சிறந்த - புலவர் - பாரதியார் - ஒரு

_______________________________________________________________

(10 புள்ளிகள்)